TNTR270000562018

(1)

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொன்னேரி

## முன்னிலை திருமதி. S. மஞ்சுளா, எம்.எல்.,

## 2026– ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29 ம் தேதி நாள் திங்கட்கிழமை

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 13/2018

குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106 ன் படி விவரங்கள்

| வ.எண். | | | |
|---|---|---|---|
| 1 | வரிசை எண்/ வழக்கு எண். | CC.No. 13/2018 | |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | செங்குன்றம் காவல் நிலையம், குற்ற எண். 1096/2017 | |
| 3 | பெயர் | எ 1– அந்தோணி ராஜ்.<br>எ 2– வினோத்<br>எ 3– அஜித்குமார்<br>எ 4– பூபதி | குற்றம்சாட்டப் பட்டவர்களின் விவரம் |
| 4 | தந்தையின் பெயர் | எ 1– த.பெ. மேத்யூ,<br>எ 2– த.பெ. ராதாகிருஷ்ணன்,<br>எ 3– த.பெ. நாகராஜ்<br>எ 4– த.பெ. கிருஷ்ணமூர்த்தி | |
| 5 | தொழில் | – | |
| 6 | குடியிருப்பு | எ 1 – எண். 117, சீனிவாசபுரம் அவுசிங் போர்டு, பட்டினம்பாக்கம், சென்னை 28. | |

| | | | |
|---|---|---|---|
| | | எ 2– எண். 123, ராஜுவ் காந்தி நகர், பெரம்பூர், சென்னை 12.<br>எ 3– எண். 155, அம்பேத்கர் நகர், பெரம்பூர், சென்னை 12.<br>எ 4– எண். 6, முதல் தெரு, பி–பிளாக், எழில்நகர், கொடுங்கையூர், சென்னை 119. | |
| 7 | வயது | எ 1–32, எ 2–32,எ 3–23, எ 4–25 (2017 ன் படி) | |
| 8 | சம்பவ தேதி | 29.05.2017 | |
| 9 | முறையீடு தேதி | 30.05.2017 | |
| 10 | கைது தேதி | எ 1 முதல் எ 4– 12.07.2017 | |
| 11 | பிணையில் விடுவித்தல் தேதி | எ 1 முதல் எ 4– 14.07.2017 | |
| 12 | ஒப்படைத்தல் / அனுப்பிவைத்த தேதி | – | |
| 13 | விசாரணை துவக்க தேதி | 08.02.2024 | |
| 14 | விசாரணை முடிந்த தேதி | 26.05.2026 | |
| 15 | தண்டனை அல்லது தீரப்பு தேதி | 29.06.2026 | |
| 16 | தீ'ரப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / | 29.06.2026 | |

| | | | |
|---|---|---|---|
| | முடிவு தேதி | | |
| 17 | காலதாமத்தின் விளக்கம் | போலிசாரால் எதிரிகளுக்கு மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் | |

இந்த வழக்கு 08.03.2018–ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஏ. வினோத்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம். கதிர்வேல் அவர்கள் ஆஜராகியும், இறுதி விசாரணைக்காக 26.05.2026 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்து, இது நாள் வரை நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, இரு தரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

கடந்த 29.05.2017ம் தேதி வாதி சிறுனியம் கிராமத்தில் உள்ள தனது 3 ஏக்கர் விவசாய நிலத்தில் மதிற்சுவர் எழுப்பும் பணி நடைபெற்றபோது அன்று மாலை சுமார் 3.15 மணியளவில் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் அந்த இடத்திற்கு சென்று கொண்டிருந்தபோது தனக்கு பின்னால் வந்த ஆட்டோ தன்னை இடித்துத்தள்ள தான் கீழே பள்ளத்தில் விழுந்துவிட்டதாகவும், வலது கால் முட்டி பெருவிரல், கை ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், தாம் சுதாரித்துக்கொண்டு எழும்போது ஆட்டோவில் வந்த மூன்று பேரில் ஒருவன் தன்னிடம் நீ போட்டுள்ள செயின் மோதிரம் செல்போன், பணம் எல்லாவற்றையும் கொடுடா என்று மிரட்டினான் என்றும் தான்

உயிருக்கு பயந்து அணிந்திருந்த 4 சவரன் செயின் ஒரு பவுன் மோதிரம், பணம் ரூ. 1,500/- மற்றும் செல்போன் ஆகியவற்றை கொடுத்துவிட்டதாகவும், ஆட்டோவில் வந்தவர்கள் அதே ஆட்டோவில் வந்த வழியே திரும்பிவிட்டார்கள் என்றும், தன்னுடைய சைட்டில் வேலை செய்யும் தொழிலாளியின் உதவியுடன் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றதாகவும், அதன் பின்னர் மறுநாள் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 392,394 உ/இ. 34ன் படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். இதுவே அரசு தரப்புவழக்கின் சுருக்கம்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு பிரிவு கு.வி.மு.ச 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் தன்மைக்கு ஏற்ப எதிரிகள் மீது இதச பிரிவுகள் 392,394 உ/இ. 34 ன் கீழ் குற்றச்சாட்டினை விளக்கிக் கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 8 வரை விசாரணை செய்யப்பட்டும் மற்றும் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 18 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

அசா 1 வாசுதேவன் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 29.05.2017ம் தேதி தான் சிறுனியத்திலுள்ள தனது நிலத்திற்கு வடப்பெரும்பாக்கத்தில் இருந்து தன்னுடைய ஸ்பிளண்டர் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 3 மணிக்கு சோத்துப்பாக்கம் ஏரிக்கரை அருகே பின்னால் வேகமாக வந்த ஆட்டோ தன் இருசக்கர வாகனத்தில் மோதியதில் தான் கீழே விழுந்து விட்டேன் என்றும், தான் கீழே விழுந்ததும் ஆட்டோவில் இருந்து இறங்கி வந்த 4 நபர்கள் தனது கழுத்திலிருந்த 4 சவரன் செயின், ஒரு சவரன் மோதிரம் தன்னுடைய செல்போன் பணம் ரூ. 1,500/- ஆகியவற்றை தன்னிடமிருந்து பறித்துக்கொண்டு பின்னர் அதே வேகத்தில் பின்னால் திரும்பி வந்த வழியிலேயே சென்று விட்டது என்றும் அதன்பின்னர் தன்னுடைய சைட்டில் இருந்தவர்கள் தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை அரசு ஸ்டேனலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார்கள் என்றும், தான் மறுநாள் காவல் நிலையம் சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், ஆஜர் எதிரிகள் தான் தன்னிடமிருந்து செயின், பணம், மொபைல் ஆகியவற்றை பறித்துச் சென்ற நபர்கள்

ஆவார்கள் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். **(புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)**

6. அசா 2 கோவிந்தராஜ் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 29.05.2017 ம் தேதி மாலை 4 மணியளவில் சிறுனியம் சைட்டில் வேலை செய்த நபர்கள் தன்னுடைய அண்ணன் வாசுதேவன் அவர்களிடம் வழிப்பறி செய்ததில் அவருக்கு அடிபட்டிருந்ததாகவும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக கூறினார்கள் என்றும், அதன் அடிப்படையில் தான் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தன் அண்ணன் தன்னிடம் சைட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் டீ கொண்டு சென்றதாகவும், பின்னால் வந்த ஆட்டோ சோத்துப்பாக்கம் சிறுனியம் ஏரிக்கரை ஓரம் இருசக்கர வாகனம் மீது ஆட்டோ மோதியதாகவும், தன் அண்ணன் கீழே விழுந்ததும், ஆட்டோவில் இருந்த நான்கு நபர்கள் ஓடி வந்து அவர் கழுத்தில் அணிந்திருந்த செயின், மோதிரம், செல்போன், பணம் ரூ. 1,500/– பறித்துச் சென்றதாக தன்னிடம் கூறினார் என்றும் அதன் பின்னர் மறுநாள் இது சம்மந்தமாக தனது அண்ணன் காவல் நியைத்தில் புகார் கொடுத்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

7. அசா 3 ஜெயக்குமார் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 27.05.2019 ம் தேதி மாலை 3.15 மணியளவில் தன் அப்பா சிறுனியம் ஊர் அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது பின்னால் ஆட்டோவில் வந்த

நபர்கள் தன் அப்பாவின் மீது மோதியதில் தன் அப்பா கீழே விழுந்தார் என்றும் ஆட்டோவில் இருந்த 3 நபர்கள் தன் அப்பாவிடம் இருந்து செயின் மோதிரம், பணம் ரூ. 1,500/- மற்றும் செல்போன் ஆகியவற்றை பிடிங்கிக் கொண்டு சென்றதாக தன் சித்தப்பா கோவிந்தராஜ் தனக்கு போன்மூலம் தகவல் கூறினார் என்றும், பின்பு தான் தன் அப்பாவுடன் சேர்ந்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அசா 4,7 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளிக்காததால் அவர்கள் பிறழ் சாட்சிகளாக அறிவிக்கக்கப்பட்டுள்ளார்கள்.

9. அசா 5 ரமேஷ் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தன்னுடைய ஓனர் வாசுதேவன் என்பவர் சிறுனியத்தில் கம்பெனிக்கு வந்து கொண்டிருந்த போது சோத்துப்பாக்கம் என்ற இடத்தில் அவருக்கு அடிபட்டது என்று சொன்னார் நான்கு நபர்கள் ஆட்டோவில் வந்து அவருடைய செயின் மொதிரம் செல்போன் பணம் ஆகியவற்றை பறித்து கொண்டு அவரை தள்ளி விட்டதாக தங்களிடம் கூறினார் என்றும், தாங்கள் அவரை ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், பின்னர் காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் சென்ற போது ஸ்டேசனில் நான்கு நபர்களை காண்பித்து ஓனரிடம் இருந்து நகைகளை பறித்து சென்றார்கள் என்று கூறி அவர்களிடமிருந்து டாலருடன் கூடிய செயினை கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தன்னிடம்

காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் 4 எண்ணிக்கை மற்றும் 1 மகஜரில் உள்ள முதலாவது கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், **அது அசாஆ 2 முதல் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

10. அசா 6 கோபால் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 2017 ம் வருடம் வாசுதேவன் தனது ஓனருக்கு ஆட்டோவில் வந்து இடித்து விட்டார்கள் என்றும் முன்பு தன்னுடைய ஓனர் வாசுதேவன் என்பவர் சிறுனியத்தில் கம்பெனிக்கு வந்து கொண்டிருந்த போது சோத்துப்பாக்கம் என்ற இடத்தில் அவருக்கு அடிபட்டது என்று சொன்னார் என்றும், நான்கு நபர்கள் ஆட்டோவில் வந்து அவருடைய செயின் மோதிரம் செல்போன் பணம் ஆகியவற்றை பறித்து கொண்டு அவரை தள்ளி விட்டதாக தங்களிடம் கூறினார் என்றும், தாங்கள் அவரை ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் பின்னர் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்ற போது ஸ்டேசனில் நான்கு நபர்களை காண்பித்து ஓனரிடம் இருந்து நகைகளை பறித்து சென்றார்கள் என்று கூறி அவர்களிடமிருந்து டாலருடன் கூடிய செயினை கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் 4 எண்ணிக்கை மற்றும் 1 மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், **அது அசாஆ 7 முதல் 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

11. அசா 8 புலன் விசாரணை அதிகாரியான கருணாகரன் என்பவர் தனக்கு முன் சோழவரம் காவல் நிலையத்தில் பணியிலிருந்த உதவி ஆய்வாளர்

திருமணி என்பவரை தனக்கு நன்கு தெரியும் என்றும், கடந்த 30.05.2017ம் தேதி காலை 11.15 மணியளவில் புகார்தாரர் கேபி வாசுதேவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று எம் 4 செங்குன்றம் காவல் நியை குற்ற எண். 1096/2017ல் இதச பிரிவுகள் 384ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் **(முதல் தகவல் அறிக்கை அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)** சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்களில் 1 சரவணன் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் 12.00 மணியளவில் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூம் பதிவு செய்துள்ளார் என்றும், **(வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அசாஆ 13,14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)** இவ்வழக்கின் எதிரிகள் பி1 புளியந்தோப்பு காவல் நிலைய குற்ற எண். 1371/2017 சட்டப்பிரிவுகள் 341,323,393,397,506(2) வழக்கில் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் இருந்தவர்களை 24.06.2017ம் தேதி காவல் உதவி அய்வாளர் திருமணி அவர்கள் சம்பிரதாய கைது செய்தும், கனம் பொன்னேரி நீதிமன்றம் 2 அவர்கள் மூலம் PT Warrant பெற்று 28.06.2017 ம் தேதி PT Warrant எதிரிகளுக்கு சார்வு செய்யப்பட்டது என்றும், இவ்வழக்கினை தான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகள் அந்தோணி, ராஜ், வினோத், அஜீத்குமார், பூபதி இவர்களை போலிஸ் காவலில் எடுத்து 30.06.2017 ம் தேதி பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 10.07.2017ம் தேதி எதிரிகள் நால்வரையும் நீதிமன்ற உத்தரவின்படி 11.07.2017 ம் தேதி மாலை 17.00 மணிக்கு வைத்து போலிஸ் காவலில் பெறப்பட்டது என்றும் வழக்கின் தொடர்ச்சியாக எதிரி அந்தோணி ராஜ் என்பவரிடம் செங்குன்றம் காவல் நிலையத்தில்

வைத்து சாட்சிகள் ரமேஷ், கோபால் இவர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யப்பட்டது **இதில் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்துச்சென்றால் செங்குன்றத்தில் நாங்கள் கொள்ளையடித்த இடத்தை காட்டுவோம், மேலும், நாங்கள் செங்குன்றத்தில் கொள்ளையடித்த டாலருடன் கூடிய செயினை வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்கிறேன்** என்பது மட்டும் அசாஆ 15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி அஜீத்குமார் என்பவரை 11.07.2017 ம் தேதி இரவு 20.00 மணிக்கு செங்குன்றம் காவல் நிலையத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றும், எதிரி பூபதி என்பவரை 11.07.2017ம் தேதி 20.45 மணிக்கு விசாரித்து அதே சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றும், வழக்கின் தொடர்ச்சியாக 12.07.2017 ம் தேதி பகல் 12.00 மணிக்கு சாட்சிகள் ரமேஷ் மற்றும் கோபால் அவர்கள் முன்னிலையில் எதிரி அந்தோணி ராஜ் எண். 117, சீனிவாசபுரம், ஹவுசிங் போர்டு பட்டினப்பாக்கம் சென்னை 28 என்ற அவருடைய வீட்டிலிருந்து KBV என்ற டாலருடன் கூடிய சுமார் 32 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்று எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், **(கைப்பற்றுதல் மகஜர்அசாஆ 16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)** அவரிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும், (வ.சொ. எண். 168/2017) **(படிவம் 91 அசாஆ 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)** எதிரிகள் அந்தோணிராஜ் வினோத், அஜீத்குமார், பூபதி இவர்களிடம் விசாரணை முடித்து 12.07.2017ம் தேதி சட்டப்பிரிவுகள் 384லிருந்து 392,394 உ/இ.

34 இதச சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது)** எதிரிகளை கனம் பொன்னேரி நீதிமன்றம் 2ல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது என்றும், இவ்வழக்கில் சாட்சிகள் கேபி வாசுதேவன் கேபி கோவிந்தராஜ் ஜெயக்குமார் பிடி சரவணன், மகேந்திரன், ரமேஷ், கோபால், காவல் உதவி அய்வாளர் திருமணி அவர்களால் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது என்றும், புகார்தாரர் வாசுதேவன் எதிரிகளை காவல் நிலையம் வந்து எதிரிகளை அடையாளம் காட்டினார் என்றும், அவரிடம் மறுவாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றும், சாட்சிகள் அனைவரும் வாக்குமூலத்தில் தன்னிடம் சொன்னதை தான் பதிவு செய்தேன் என்றும், இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் அந்தோணிராஜ், வினோத் அஜீத்குமார் பூபதி இவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 392,394 உ/இ. 34இதசவின் கீழ் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச 313(1) (b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிபோது எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் கூறினார்கள்.

**13. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை**

இவ்வழக்கில் எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 392,394 உ/இ. 34ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும். அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் பட்டியல் சாட்சிகளில் 8 ஐ விசாரிக்க தேவையில்லை என்று மேலெழுத்து செய்துள்ளார்.

**14. சாட்சியங்கள் மீதான ஆய்வு**

இரு தரப்பு வாதங்களும் பரிசீலனை செய்யப்பட்டு மற்றும் சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக சீர்தூக்கி பார்க்கப்பட்டது.

15. அசா 1 வழக்கின் புகார்தாரர் வாசுதேவன் ஆவார். சம்பவமானது 29.05.2017 ல் மாலை 3.15 மணிக்கு நடந்துள்ளது என்றும், தன்னுடைய நிலத்தில் மதில்சுவர் எழுப்பும் பணி நடைபெற்று வந்தபோது அதை தன்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று பார்த்து வருவது வழக்கம் என்றும், அதேபோல் சோத்துப்பாக்கம் எரிக்கரை அருகே சம்பவ தேதியில் வந்தபோது தனக்கு பின்னால் வந்த ஆட்டோ இடித்து கீழே விழுந்துவிட்டதாகவும், அப்போது அந்த ஆட்டோவிலிருந்து இறங்கி வந்த நபர்கள் அவரிடமிருந்த செயின், மோதிரம், பணம் ரூ. 1,500/- செல்போன் ஆகியவற்றை பிடுங்கிச்சென்றது ஆஜர் எதிரிகள் தான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில் எந்தவித முரண்பாடும், மிகைப்படுத்தலும் காண முடியவில்லை.

16. எதிரிகள் தரப்பில் அசா1ஐ செய்த குறுக்கு விசாரணையிலும் எதிரிகளுக்கு எந்தவித சாதகமான அம்சங்களும் வழக்கை குறித்து வெளிக்கொணர முடியவில்லை. அசா 2,3 ஆகியோர் அசா 1ன் அண்ணன் மற்றும் மகன் ஆவர். அவர்கள் சம்பவத்தை அசா 1ன் வாயிலாக கேள்வியுற்றுள்ளதால் கேள்விநிலை சாட்சிகள் ஆவர். அசா 1ன் சாட்சியத்தை ஒத்தே அசா 2,3 ன் சாட்சியங்கள் உள்ளது. அசா 5,6 ஆகியோர் எதிரிகள் கைது செய்யப்பட்டு தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களிலும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு தயார் செய்யப்பட்ட மகஜரிலும் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் ஆவர். அவர்கள் இருவரும் காவல் நிலையத்தில் வைத்து தங்களுடைய சாட்சி கையொப்பத்தை போட்டதாக குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டது வழக்கமாக இதுபோன்ற சாட்சிகளிடம் எதிரிகள் தரப்பில் கேட்கப்படும் கேள்விக்கு சாட்சிகள் அவசர கதியில் கொடுத்த பதில் என்று முடிவு செய்யப்பட்டு அவை வழக்கில் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்று முடிவுக்கு வர எந்தவித உதவியும் நல்காது என்று கருதப்படுகிறது. மேலும், எதிரிகளின் செயலால் புகார்தாரருக்கு காயங்கள் ஏற்பட்டிருப்பதும், அவரின் சாட்சியத்தின் மூலம் தெரிய வந்தாலும் அதற்கான மருத்துவ சிகிச்சை பெற்ற ஆவணங்கள் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்படாததால் பிரிவு 394 இதசவிற்கான குற்றச்சாட்டு முழுவதும் நிரூபிக்கப்படாமல் உள்ளது. ஆகையால், பிரிவு 394 இதசவின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

17. அசா 8 ஆன விசாரணை அதிகாரி அசா 5,6 ஆகியோர் முன்னிலையில் எதிரிகள் கைது செய்யப்பட்ட பின்னர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதன் அடிப்படையில் முதலாம் எதிரி அந்தோணிராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுதிக்கப்பட்ட பகுதி மட்டும் அசாஆ 15ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசா 15ல் **அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்துச்சென்றால் செங்குன்றத்தில் நாங்கள் கொள்ளையடித்த இடத்தை காட்டுவோம், மேலும், நாங்கள் செங்குன்றத்தில் கொள்ளையடித்த டாலருடன் கூடிய செயினை வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்கிறேன் என்பது** எதிரிகள் திட்டமிட்டு உட்கருத்துடன் செயல்பட்டு அசா 1இடமிருந்து பறித்த தங்க செயினை தன் வீட்டில் பதுக்கி வைத்திருந்ததும், அதனை விசாரணை அதிகாரி மீட்டிருப்பதும் தெள்ளத்தெளிவாகிறது. அசா 5,6 ஆகியோரின் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சாட்சியம் அசா 8 ஆல் உறுதியூட்டுவதாக உள்ளது. ஆகையால், எதிரிகள் ஒரே நோக்கத்துடன் செயல்பட்டு இருசக்கர வாகனத்தில் வந்த புகார்தாரரை ஆட்டோவில் பின்னால் வந்து இடித்து தள்ளி அவர் கீழே விழுந்தவுடன் அவரிடமிருந்து செயின், மோதிரம், பணம் ரூ. 1,500/- செல்போன் ஆகியவற்றை பறித்துச்சென்றது நிரூபணமாகிறது. எதிரிகள் மீது இதேபோன்ற வழக்கு நிலுவையில் உள்ளதும் அவர்களுக்கு பாதகமான அம்சமாகவே கருதப்படுகிறது. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எதிரிகள் தான் குற்றச்சாட்டில் உள்ளவாறு குற்றத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபணம்

செய்யப்பட்டிருப்பதால் அவர்களை குற்றவாளிகள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, எதிரிகள் மீது இதச பிரிவு 392 உ/இ. 34ன் கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டு, பிரிவு 392 உ/இ. 34 இதசவின் கீழ் தலா 1 வருட கால மெய்க்காவல் தண்டனையும், தலா ரூ. 1,000/- அபராதம் விதித்தும், மேலும், அபராத தொகையை கட்டத்தவறினால் ஒரு வாரகாலம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் உத்தரவிடப்படுகிறது. இதச பிரிவு 394 உ/இ. 34ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.**

**18.** இவ்வழக்கில் (வ.சொ. எண்.168/2017 தேதி.15.11.2017) வழக்கு சொத்தான KVB என்று எழுதப்பட்ட டாலருடன் கூடிய சுமார் 32 கிராம் எடை கொண்ட தங்க செயினை புகார்தாரர்/மனுதாரர் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அவரே அதை நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து- தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ம் நாள் திங்கட்கிழமை இந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2.

பொன்னேரி.

**அட்டவணை**

**அரசு சாட்சிகள்**

| அ.சா.எண் | அரசு சாட்சிகள் | சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | வாசுதேவன் | புகார்தாரர் |
| அ.சா.2 | கோவிந்தராஜ் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.3 | ஜெயக்குமார் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.4 | மகேந்திரன் | பிறழ் சாட்சி |
| அ.சா.5 | ரமேஷ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.6 | கோபால் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.7 | சரவணன் | பிறழ் சாட்சி |
| அ.சா.8 | கருணாகரன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு சான்றாவணங்கள்**

நீதிமன்ற படிவ எண். 68

சான்றாவணங்களின் பட்டியல்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொன்னேரி

| சான்றாவண வரிசை .எண். | சான்றாவண விவரம் மற்றும் அதனுடைய நாள் | சான்றாவணம் எப்போதும் வழக்கலன் தாக்கல் செய்யப்பட்டதோ அந்த நாள் | எப்படி குறியிடப்பட்டது | எவரால் குறியிடப்பட்டது | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் | 21.01.2025 | அ.சா.ஆ.1 | வாசுதேவன் (அ.சா.1) | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | ஒப்புதல் வாக்கு மூலம் 1ல் உள்ள 1ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.2 | ரமேஷ் (அ.சா.5) | – |
| 3 | ஒப்புதல் வாக்கு மூலம் 2ல் உள்ள 1ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.3 | ரமேஷ் (அ.சா.5) | – |
| 4 | ஒப்புதல் வாக்கு மூலம் 3ல் உள்ள 1ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.4 | ரமேஷ் (அ.சா.5) | – |
| 5 | ஒப்புதல் வாக்கு மூலம் 4ல் உள்ள 1ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.5 | ரமேஷ் (அ.சா.5) | – |
| 6 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.6 | ரமேஷ் (அ.சா.5) | – |
| 7 | ஒப்புதல் வாக்கு மூலம் 1ல் உள்ள 2ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.7 | கோபால் (அ.சா.6) | – |
| 8 | ஒப்புதல் வாக்கு மூலம் 2ல் உள்ள | 17.11.2025 | அ.சா.ஆ.8 | கோபால் (அ.சா.6) | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2ம் கையொப்பம் | | | | |
| 9 | ஒப்புதல் வாக்கு மூலம் 3ல் உள்ள 2ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.9 | கோபால் (அ.சா.6) | – |
| 10 | ஒப்புதல் வாக்கு மூலம் 4ல் உள்ள 2ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.10 | கோபால் (அ.சா.6) | – |
| 11 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் | 17.11.2025 | அ.சா.ஆ.11 | கோபால் (அ.சா.6) | – |
| 12 | முதல் தகவல் அறிக்கை | 06.05.2026 | அ.சா.ஆ.12 | கருணாகரன் (அ.சா.8) | – |
| 13 | வரைபடம் | 06.05.2026 | அ.சா.ஆ.13 | கருணாகரன் (அ.சா.8) | – |
| 14 | பார்வை மகஜர் | 06.05.2026 | அ.சா.ஆ.14 | கருணாகரன் (அ.சா.8) | – |
| 15 | ஒப்புதல் வாக்கு மூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 06.05.2026 | அ.சா.ஆ.15 | கருணாகரன் (அ.சா.8) | – |
| 16 | கைப்பற்றுதல் | 06.05.2026 | அ.சா.ஆ.16 | கருணாகர | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மகஜர் | | | ன் (அ.சா.8) | |
| 17 | படிவம் 91 | 06.05.2026 | அ.சா.ஆ.17 | கருணாகரன் (அ.சா.8) | – |
| 18 | சட்டப்பிரிவு மாறுதல்அறிக்கை | 06.05.2026 | அ.சா.ஆ.18 | கருணாகரன் (அ.சா.8) | – |

**எதிரி தரப்பு சாட்சி மற்றும்சான்றாவணங்கள் இல்லை**

**சான்றுபொருட்கள் – இல்லை**

**குறிப்பு–**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு காவலர் மூலம் தெரிவிக்கப்பட்டது.

2.எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

3. எந்த ஒரு சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

நீதித்துறை நடுவர் எண். 2.

பொன்னேரி.

அம்மா உத்தரவை தெரிந்துகொண்டேன்.

உத்தரவு நகலை பெற்றுக்கொண்டேன்.

1. அங்குமணி 3. N. AJITHKUMAR.

2. R. விஜய் 4. K. பூபதி